கோவை, விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை
முன்னிலை: திரு.மு.சுப்பையா,பி.எஸ்.சி (விவ),

செ.மு.ஆ.எண். அ1 / 23189 /2021 நாள்: 13.12.2021.

22 DEC 2021

பொருள்: பணிக்குழு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – 01.10.2019 அன்றைய நிலையிலான இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) பதவிக்கு பதவி உயர்வு அங்கீகரிக்கப்பட்டது – முறையான பதவி உயர்வில் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) ஆக திருச்சி, விதைஆய்வு துணை இயக்குநர் அலுவலகத்தில் பணிநியமனம் செய்து ஆணையிடப்பட்டது – இளநிலை உதவியாளர் (பி.அ) பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கி உத்தரவிடல் – தொடர்பாக.

பார்வை:
1. சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.அஉ.ப.1/ 117368 /2019, நாள்.24.07.2020.
2. இவ்வியக்கக செயல்முறை ஆணை எண்.அ1/14636/2020, நாள். 09.09.2020.
3. திருச்சி, விதைஆய்வு துணை இயக்குநர் கடித எண். அ.1311/2021, நாள்– 24.11.2021.

••••••••••

**உத்தரவு:**

பார்வை (1) மற்றும் (2)–ல் காணும் செயல்முறை ஆணைகளைத் தொடர்ந்து, 01.10.2019 அன்றைய நிலையிலான இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) பதவிக்கு பதவி உயர்வு அங்கீகரிக்கப்பட்ட முறையான பதவி உயர்வில் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) ஆக திரு.த.மனோஜ்குமார் அவர்களுக்கு திருச்சி, விதைஆய்வு துணை இயக்குநர் அலுவலகத்தில் பணிநியமனம் செய்து ஆணையிடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து திரு.த.மனோஜ்குமார் அவர்கள் இத்துறைக் கட்டுப்பாட்டிலுள்ள திருச்சி, விதைஆய்வு துணை இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது)–ஆக 14.09.2020 முற்பகல் பணியில் சேர்ந்து கொண்டார்.

அன்னார் இளநிலை உதவியாளர்(பி.அ) பதவியில் பணியேற்ற நாளான 14.09.2020 முற்பகல் அன்று பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

மேற்காணும் பணியாளர் இளநிலை உதவியாளர் (பிணையம் அற்றது) பதவியில் இரண்டு ஆண்டு கால தகுதிகாண் பருவத்தினை, மூன்று ஆண்டு தொடர் பணிக்காலத்திற்குள் முடிக்க வேண்டும்.